ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2325/83 - 2023 අප්‍රේල් මස 01 වැනි සෙනසුරාදා - 2023.04.01

2325/83 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் கோப்பு இல.: BOP/4/4/1 - 89.
காணி அமைச்சின் கோப்பு இல.: 4-3/3/2021/PI/153.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் போபே - போத்தல பிரதேச செயலாளர் பிரிவில் 117ஏ, மீபாவல கிராம அலுவலர் பிரிவில் மீபாவல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 810169 இன் வலய இல. 01 இன் தாள் இல. 03 இல் துண்டு இல. 01 முதல் 03 வரை மற்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் :

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : வக்கட்டியவெல; விபரம் : வயல்வெளி; உரிமை கோருவோர் : மகேஷ் பியாந்த கலன்சூரிய, ஹொலுவாகொட, உலுவிதிகே, காலி; விஸ்தீரணம் : 0.2857 ஹெக்டயார்.

02. துண்டு இல. 02

காணியின் பெயர் : கண்டுபிடிக்க முடியவில்லை; விபரம் : எல; உரிமை கோருவோர் : உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0086 ஹெக்டயார்.

03. துண்டு இல. 03

காணியின் பெயர் : உஸ்கொடவில; விபரம் : வயல்வெளி; உரிமை கோருவோர் : லலிதா கலன்சூரிய மற்றும் பலர், நராவல, போத்தல; விஸ்தீரணம் : 0.3677 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்

மூலமாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு போபே - போத்தல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமையை உறுதிப் படுத்த, உங்களிடம் உள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் அத்துடன் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும் ஆய்வு நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஐ. எஸ். சமரகோன்,
பிரதேச செயலாளர்,
போபே - போத்தல.

பிரதேச செயலகம்,
போபே - போத்தல,
2023, மாச்சு 30.

EOG 04 - 0014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.